பாடல் அடிகளைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்

மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்

மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ

ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

வினாக்கள்

1."உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது? இறைவனிடம் குலசேகராழ்வார்

2. வாளால் சுடுவது யார்?

மருத்துவன்

3.இப்பாடலை எழுதியவர் யார்?

குலசேகராழ்வார்.

4.இப்பாடல் இடம் பெற்ற நூல் யாது?பெருமாள் திருமொழி

5.மாளாத , மீளாத் துயர், ஆளா - என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

6. பாடலில் வந்துள்ள அடி எதுகைகளை எழுதுக

வாளால், மாளாத மீளா, ஆளா

7. உனதருளே பிரித்து எழுதுக.

உனது + அருளே

8. மாயம் என்னும் சொல்லின் பொருள் விளையாட்டு

9.இப்பாடலில் அம்மா என்று உருவகப்படுத்தப்படுபவர் திருமால்

10. சுடினும் பொருள் சுட்டாலும்

11.மாளாத பொருள் தீராத

12. "மீளாத் துயர்தரினும்" – துயர் தருபவர் யார்?

இறைவன்

13.அடியேன் என்பது குலசேகர ஆழ்வாரைக் குறிக்கிறது.

14."வித்துவக்கோட்டம்மா" என்று குலசேகர ஆழ்வார் பெருமாளை அன்னையாக உருவகித்துக் கூறுகிறார்.

15.வாளால் அறுத்துச் சுடினும் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு - வினையெச்சம்